# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க

# காணிச் சீர்திருத்த (திருத்தச்) சட்டம்

---

[1981, மார்ச்சு மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1981, மார்ச்சு மாதம் 06 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 35 　　 தபாற் செலவு : சதம் 50

# 1981 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த (திருத்தச்) சட்டம்

[1981, மார்ச்சு மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 12/81
1414

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1981 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்தில் 42 ஔஔ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

2. 1975 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 42 ஔ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டத்தின் 42 ஔஔ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

'இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியன்று இருந்த சில தோட்டக் காணிகள் பகிரங்கக் கம்பெனி ஒன்றிற்குச் சொந்தமான தோட்டக் காணிகளாகக் கருதப்படல்வேண்டும் என்பது.

42 ஔஔ. 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கம்பெனிகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவில் அல்லது இச்சட்டத்தின் மூற்போந்த ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும்தேதியன்று கம்பனியொன்றினால் (அத்தகைய கம்பெனி பகிரங்கக் கம்பெனி ஒன்றாக அல்லது தனியார் கம்பெனி ஒன்றாக இருப்பினுஞ் சரி) சொந்தமாக வைத்திருக்கப்படுவதும் அல்லது உடைமை கொண்டிருக்கப்படுவதும், இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்டுள்ள அல்லது கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பெனியொன்றினால் 1974 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் நாளன்று அல்லது அதன்பின்னர், அத்தகைய கம்பெனி ஒன்றுக்கு அல்லது 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கம்பெனிகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் நோக்கங்களுக்காக அப்போதுள்ள கம்பெனியொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கம்பெனியொன்றுக்கு அல்லது கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றுக்கு கைமாற்றப்பட்டுள்ள தோட்டக் காணி ஒன்றாக உள்ளதுமான தோட்டக்காணி ஒவ்வொன்றும், இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும்தேதியன்று பகிரங்கக் கம்பெனி ஒன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது உடைமை கொண்டிருக்கப்படும் தோட்டக்காணியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, அத்தகைய தோட்டக்காணி ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியன்று ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்படுதலும் வேண்டும்.'.

2—ஏ 55438—6,975 (02/81)

2 ஆம் பிரிவு கடந்தகாலத்தையும் உள்ளடக்கிப் பயனுறுவதாதல் வேண்டும் என்பது.

3. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தில் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்காகவும், 1975 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் பதினேழாம் நாளன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, ஏதேனும் மேன்முறையீடு, வழக்கு, விண்ணப்பம் அல்லது வேறு நடவடிக்கை அத்தகைய மேன்முறையீடு, வழக்கு, விண்ணப்பம் அல்லது நடவடிக்கை (இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் அல்லது பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது தொடரப்பட்டிருப்பினுஞ்சரி), ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் விளங்கப்படும் பொழுது தோட்டக்காணி எதுவும் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதா என்பது பற்றிய பிரச்சினை எதுவும் எழுமிடத்து, அல்லது தோட்டக்காணி தொடர்பாக வேறு விடயம் எதுவும் எழுமிடத்து அத்தகைய பிரச்சினை அல்லது விடயம், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் செயற்பாட்டின் காரணமாக தோட்டக்காணி எதுவும் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுகின்றவிடத்தும், அத்துடன் அத்தோட்டக்காணி அவ்வாறு உரித்தாக்கப்படுமுன்னர் அதன் சொந்தக்காரராயிருந்த ஆள், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய தோட்டக்காணி தொடர்பில் ஆணைக்குழு பெற்றுக்கொள்வதற்கு அல்லது ஒதுக்கிக்கொள்வதற்கு உரித்துடைய எவையேனும் பணங்களைப் பெற்றிருக்குமிடத்து அல்லது ஒதுக்கியிருக்குமிடத்து, அத்தகைய பணங்கள் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய தோட்டக்காணி தொடர்பாகச் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில்—

"முதன்மைச் சட்டவாக்கம்" என்பது, 1975 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டம் என்று பொருள்படும்; அத்துடன்

"ஆணைக்குழு" என்பது, 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழு என்று பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30; (வெளிநாடு) ரூபா 40; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் சந்தாப்பணங்கள் விடயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்திரம் அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்டா என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.